Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No. 41/2020 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW 16 |
| | | Defence |
| | | Court |
| Name | : பாலமுரளி | |
| Father / Husband Name | : **சண்முகநாதன்** | |
| Village | : **அருப்புக்கோட்டை** | |
| Taluk | : **அருப்புக்கோட்டை** | |
| Caste | : | |
| Calling | : **கிராம நிர்வாக அலுவலர்** | |
| Religion | : **இந்து** | |
| Age | : 40 | |

( 2,3 **எதிரிகள் ஆஜர்**. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 08.01.2026.

(**வழக்கு விசாரணையின் போது இலவச வழக்கறிஞர் திருமதி.A.அனிதா, பதிவு எண் M.S.No.1128/2015 நீதிமன்றத்தில் ஆஜரில் இருந்தார்.**

**திரு.M.பாலமுருகன், பதிவு எண் M.S.No.1579/1997 மற்றும் திரு.P.கணேசன், பதிவு எண் M.S.No.2783/2007 ஆகியோர் நீதிமன்றத்தில் இருந்தனர். எதிரிகளுக்கு இலவச சட்ட உதவி அளிக்கப்படும் என்று தெரிவித்தபோதும் அவர்களாகவே இந்த வழக்கை நடத்துவதாக கூறிவிட்டார்கள். ஆகையால், இலவச வழக்கறிஞர் திருமதி.A.அனிதா, அவர்கள் முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. )**

**முதல் விசாரணை :-**

1. நான் கிராம நிர்வாக அலுவலராக பணியமர்த்தப்பட்டுள்ளேன். தற்போது இடைக்கால பணிநீக்கத்தில் உள்ளேன். இதற்கு முன்பு கடந்த 2019 ம் ஆண்டு பெரியபுளியம்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தேன். கடந்த 02.02.2019 அன்று காலை சுமார் 7.00 மணியளவில் அருப்புக்கோட்டை டவுன் காவல்நிலையத்திலிருந்து எனக்கு போன் செய்து இந்த வழக்கு தொடர்புடைய ஒரு நபரை விருதுநகர் செல்லும் சாலையில் டிவிஎஸ் ஷோ ரூம் அருகே பிடித்து வைத்திருப்பதாகவும், அவரிடம் விசாரிக்க உள்ளதாகவும், அந்த நடவடிக்கைக்கு என்னையும், என்னுடைய உதவியாளர் இப்ராகிமையும் உதவிக்கு இருக்குமாறு அழைத்ததின் பேரில், நான் வட்டாட்சியரிடம் தகவல் தெரிவித்து விட்டு நானும் என்னுடைய உதவியார் இப்ராகிமும் காலை சுமார் 7.30 மணியளவில் டிவிஎஸ் ஷோ ரூம் அருகே சென்றோம்.

2. அங்கு சென்ற போது போலீசார் சுமார் 30–33 வயது மதிக்கதக்க ஒரு ஆண் நபரை போலீசார் பிடித்து வைத்திருந்தார்கள். அந்த நபரின் பெயர் ராஜா (எ) சந்தனராஜா என்று போலீசார் கூறினர். போலீசார் அவரிடம் நடந்த விவரங்களை எங்கள் முன்னிலையில் கூறுமாறு கூறினர். அதன் பேரில் ராஜா (எ) சந்தனராஜா எவ்வித தூண்டுதலோ, அச்சுறுத்தலோ இன்றி தன்னிச்சையாக எங்கள் முன்னிலையில் போலீசாரிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில், தான் லோடுமேனாக வேலை செய்வதாகவும், தனக்கு அதிக கடன் பிரச்சனை

உள்ளது என்றும், தற்போது மனைவியுடன் சேர்ந்து வாழவில்லை என்றும், அருப்புக்கோட்டை அன்பு நகரை சேர்ந்த பாண்டியராஜன் தனக்கு மாமா – மருமகன் உறவு முறை ஆவார் என்றும், பாண்டியராஜனிடம் தன்னுடைய குடும்ப பிரச்சனை மற்றும் கடன் பிரச்சனை பற்றி கூறியதாகவும், அதற்கு பாண்டியராஜனும் தனக்கும் கடன் பிரச்சனை இருப்பதாக ராஜாவிடம் கூறியதாகவும், கடன் பிரச்சனைகளை தீர்க்க தான் ஒரு ஆலோசனை வழங்குவதாக பாண்டியராஜன் தெரிவித்ததாக ராஜா கூறினார்.

3. பாண்டியராஜன், ராஜாவிடம் ஆயிரங்கண் மாரியம்மன் கோவில் அருகில் தனக்கு தெரிந்துஒரு பெண்மணி உள்ளார் என்றும், அந்த பெண்மணியின் பெயர் கனகவள்ளி என்றும், அவரின் கணவர் கேரளாவில் பணிபுரிவதாகவும், கனகவள்ளியின் மகனான அருணகிரியும் தாயுடன் வசிக்கவில்லை என்றும், தனியாக வசிப்பதாகவும், அந்த பெண்மணியின் கழுத்தில் இருக்கும் தாலி சங்கிலி சுமார் 4–5 சவரன் எடை கொண்டதாக இருக்கும் என்றும், காதில் உள்ள கம்மல் மற்றும் மூக்குத்தியை சேர்த்து சுமார் மொத்தம் 6 பவுன் என்று ராஜாவிடம் கூறியதாக தெரிவித்தார். ஆகையால் ராஜாவிடம் பாண்டியராஜன் கனகவள்ளியை கொலை செய்து விட்டால் அவர் அணிந்துள்ள நகைகளை வைத்து தங்கள் கடன் பிரச்சனைகளை தீர்த்து விடலாம் என பாண்டியராஜன், ராஜாவிடம் ஆலோசனை வழங்கியதாக கூறினார்.

4. அதன் அடிப்படையில் எதிரி ராஜா, அருப்புக்கோட்டை பஜார் பகுதியில் கொலைக்கு பயன்படுத்த ஒரு கத்தியை வாங்கியதாக எதிரி ராஜா தெரிவித்தார். கனகவள்ளி வீட்டில் தனியாக தான் வசிப்பார் என்றும், அவருடன் வேறு யாரும் வசிக்க மாட்டார்கள் என்றும், சரியான தருணத்தில் அவரை கொலைசெய்து விட்டால் அவர் அணிந்திருந்த தங்க

நகைகளை கைப்பற்றி இருவருடைய கடனையும் அடைத்து விடலாம் என பாண்டியராஜன், ராஜாவிடம் தெரிவித்ததாக ராஜா கூறினார்.

5. அதன் பேரில் பாண்டியராஜன் 30.01.2019 அன்று கனகவள்ளி வீட்டிற்கு சென்று அவரிடம் புடவையை கொடுப்பதாகவும், அந்த புடவையை திரும்ப வாங்குவதற்காக மறுநாள் தன்னுடைய மாப்பிள்ளை ராஜா வருவார் என கனகவள்ளியிடம் பாண்டியராஜன் தெரிவித்ததாக ராஜா கூறினார். மேலும் நடந்த விவரங்களை ராஜா கூறினார். அன்றைய தினம் 9.15 மணிக்கு எதிரி ராஜாவிடமிருந்து இரத்தக்கறை படிந்த கத்தி ஒன்று, கருப்பு கலரில் V என நேராகவும், தலைகீழாகவும் போடப்பட்ட இரத்தக்கறை படிந்த முழுக்கை சட்டை, கருநீல கலரில் வெள்ளை கலரில் கோடு போட்ட இரத்தக்கறை படிந்த கைலி ஒன்று, பிரவுன் கலரில் VKC Pride என போடப்பட்ட 10 நம்பர் கொண்ட இரத்தக்கறை படிந்த செருப்பு ஒரு ஜோடி ஆகியவற்றை கைப்பற்றினார். **இரத்தக்கறை படிந்த கத்தி சா.பொ.9 ஆகவும், இரத்தக்கறை படிந்த முழுக்கை சட்டை சா.பொ.10 ஆகவும், இரத்தக்கறை படிந்த கைலி ஒன்று சா.பொ.11 ஆகவும், பிரவுன் கலரில் VKC Pride என போடப்பட்ட 10 நம்பர் கொண்ட இரத்தக்கறை படிந்த செருப்பு ஒரு ஜோடி சா.பொ.12 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

6. மேலும் எதிரி பாண்டியராஜன் அவருடைய வீடான மகாராணி தியேட்டருக்கு அருகில் அமைந்துள்ள வீட்டில் இருப்பதாகவும், அங்கே சென்றால் பாண்டியராஜனை தான் அடையாளம் காட்டுவதாக கூறியதன் பேரில் போலீசார் எதிரி ராஜாவை வழிநடத்தி செல்ல நானும் என்னுடைய கிராம உதவியாளர் இப்ராகிமும், போலீசார் மற்றும் எதிரி ராஜா ஆகியோர் பாண்டியராஜன் வீட்டிற்கு சென்றோம். அச்சமயம் எதிரி பாண்டியராஜன் வீட்டிலிருந்தார். எதிரி பாண்டியராஜன் நீதிமன்றத்தில் இன்று

ஆஜராகியுள்ளார். (நீதிமன்றத்தில் உள்ள எதிரி பாண்டியராஜனை சாட்சி கைகளை நீட்டி அடையாளம் காட்டினார்.) போலீசார் ஆஜர் எதிரி பாண்டியராஜனை அவருடைய வீட்டில் வைத்து கைது செய்தார்கள். எதிரி பாண்டியராஜன் போலீசார் விசாரித்தபோது தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் நானும் கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் எதிரிகள் ராஜா மற்றும் பாண்டியராஜன் ஆகியோர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **எதிரி ராஜா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி பாண்டியராஜன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினம் 13.00 மணிக்கு எதிரி பாண்டியராஜன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கனகவள்ளியிடமிருந்து பறித்த 16 கிராம் எடை கொண்ட கவரிங் செயின், தோடு ஒரு ஜோடி, மாட்டல் ஒரு ஜோடி, சைடு மாட்டல் 1 ஜோடி மற்றும் TN 67 BX 1960 பதிவெண் கொண்ட TVS XL 100 என்ற இருசக்கரவாகனம் ஆகியவற்றை போலீசார் மகஜர் மூலம் கைப்பற்றினர். **TN 67 BX 1960 பதிவெண் கொண்ட TVS XL 100 என்ற இருசக்கரவாகனம் சா.பொ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. மேலும் எதிரி பாண்டியராஜனை போலீசார் விசாரிக்கும் போது அவர் இந்த கொலை சம்பவத்தில் திரு.கணேசன் என்பவரும் உடந்தையாக இருந்து செயல்பட்டதாக கூறினார். மேலும் கனகவள்ளியிடமிருந்து பறிக்கப்பட்ட மூக்குத்தியை கணேசனிடம் கொடுத்து வைத்துள்ளதாக எதிரி பாண்டியராஜன் கூறினார். அதன் பிறகு போலீசாருடன் எதிரிகள்

ராஜா, பாண்டியராஜன், நான் மற்றும் என்னுடைய கிராம உதவியாளர் இப்ராகிம் ஆகியோர் போலீசார் வாகனத்தில் மாகாளியம்மன் கோவில் தெருவில் உள்ள கணேசன் வீட்டிற்கு எதிரிகளுடன் சென்றோம். எதிரி ராஜா கணேசன் வீட்டை அடையாளம் காட்டினார். கணேசன் வீட்டிற்கு சென்ற போது மதியம் சுமார் 2.30 மணியிருக்கும். போலீசார் கணேசனை விசாரித்தபோது கணேசனும் இந்த கொலை சம்பவத்திற்கு உடந்தையாக இருந்து செயல்பட்டதை ஒப்புக்கொண்டு எவ்வித அச்சுறுத்தலோ தூண்டுதலோ இன்றி தன்னிச்சையாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். எதிரி கணேசனும் பாண்டியராஜனும் உறவினர்கள் என்றும், கொலைக்கு உடந்தையாக இருந்ததற்காக கணேசனுக்கு கனகவள்ளி அணிந்திருந்த மூக்குத்தியை பிரதிபலனாக அளித்ததாகவும், அதனை தான் பெற்றுக்கொண்டதாகவும் கணேசன் வாக்குமூலம் அளித்தார்.

8. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினம் 15.30 மணிக்கு எதிரி கணேசன் ஆஜர் செய்த சுமார் 1.400 கிராம் எடை கொண்ட தங்கத்தாலான மூக்குத்தி–1 ஜோடி கைப்பற்றினார். **எதிரி கணேசன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் வழக்கு சொத்துகளை எதிரி ராஜாவிடமிருந்து கைப்பற்றியதற்கான அத்தாட்சி அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் வழக்கு சொத்துகளை எதிரி பாண்டியராஜனிடமிருந்து கைப்பற்றியதற்கான அத்தாட்சி அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் வழக்கு சொத்துகளை எதிரி கணேசனிடமிருந்து கைப்பற்றியதற்கான அத்தாட்சி அ.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் எதிரிகளை கைது செய்து மேல் விசாரணை தொடர்ந்தார்கள். போலீசார் இந்த வழக்கு

சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

**(எதிரிக்காக எதிரியே குறுக்கு விசாரணை செய்தார்)**

9. நான் காலை 7.00 மணியளவில் என் வீட்டிலிருந்தபோது போலீசார் எனக்கு தகவல் தெரிவித்தார்கள். அதன் பிறகு வட்டாட்சியரிடம் மொபைல் போன் மூலம் தகவல் தெரிவித்து அவரின் அனுமதியை பெற்று கிராம உதவியாளரிடம் தகவல் தெரிவித்து நானும் கிராம உதவியாளரும் காலை 7.30 மணிக்கு டிவிஎஸ் ஷோ ரூம் அருகே சென்றோம். டிவிஎஸ் ஷோ ரூமுக்கும் போலீசார் மற்றும் எதிரி ராஜா ஆகியோர் இருந்த இடத்திற்கும் இடையே சுமார் 100 மீட்டர் தொலைவு இருக்கும். உதவி ஆய்வாளர், எதிரி ராஜா மற்றும் இரண்டு காவலர்கள் ஆகியோர் டிவிஎஸ் ஷோ ரூம் அருகே நின்றுக்கொண்டிருந்தார்கள். நான் சென்ற பிறகு தான் எதிரி ராஜா வாக்குமூலம் அளித்தார். அதன் பிறகு தான் எதிரி ராஜா பொருட்களை TNTC குடோனில் இருந்து எடுத்துக்கொடுத்தார். எதிரி ராஜா, போலீசார் மற்றும் நாங்கள் TNTC குடோனிற்கு நான் எனது வாகனத்திலும், போலீசாரும் எதிரி ராஜாவும் போலீசார் வாகனத்தில் வந்தார்கள். எதிரி ராஜா என்ன நிறத்தில் சட்டை அணிந்திருந்தார் என்று என்னால் நினைவு கூற இயலவில்லை. எதிரி ராஜா கொடுத்த வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் பதிவு செய்தார்.

10. அதன் பிறகு குற்றச்செயலில் நீங்களும் (எதிரி பாண்டியராஜன்) சம்மந்தப்பட்டுள்ளதாக கூறியதன் அடிப்படையில் போலீசார் உங்களிடம் (எதிரி பாண்டியராஜன்) விசாரணைக்காக வந்தார்கள். என் வீட்டிற்கு (எதிரி பாண்டியராஜன்) விசாரணைக்காக போலீசாரும் எதிரி ராஜாவும் ஒரு வாகனத்திலும், உதவி ஆய்வாளர் ஒரு வாகனத்திலும், நான் என்னுடைய

வாகனத்திலும் வந்தோம். டீக்கடை மகாராணி தியேட்டருக்கு அருகே மெயின் ரோட்டில் அமைந்துள்ளதா அல்லது உட்புற தெருவில் அமைந்துள்ளதா என்றால் மெயின் ரோட்டில் டீக்கடை உள்ளது என சாட்சி கூறுகிறார்.

11. உங்கள் வீட்டிற்கு (எதிரி பாண்டியராஜன்) நானும், கிராம உதவியாளரும், போலீசாரும் எதிரி ராஜாவும் வந்தோம். உங்களை (எதிரி பாண்டியராஜன்) உங்களது வீட்டில் வைத்து பார்த்தேன். வழக்கு சொத்துகளான தங்க பொருட்களை உங்களுடைய (எதிரி பாண்டியராஜன்) வீட்டில் பீரோவிலிருந்து கைப்பற்றப்பட்டது. பீரோவை போலீசார் திறந்தார்கள். எந்த போலீசார் திறந்தார் என்று எனக்கு நினைவில் இல்லை. பீரோவில் எந்த பகுதியிலிருந்து பொருட்களை எடுத்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு கூற இயலாது. பீரோவிலிருந்து செயின், தோடை மட்டும் தான் எடுத்தார்கள்.

12. உங்களது (எதிரி பாண்டியராஜன்) வாக்குமூலம் உங்கள் (எதிரி பாண்டியராஜன்) வீட்டில் வைத்து பெறப்பட்டது. உங்களது (எதிரி பாண்டியராஜன்) வாக்குமூலத்தில் நானும் கிராம உதவியாளரும் சாட்சி கையெழுத்து செய்தோம். உங்களது (எதிரி பாண்டியராஜன்) வீட்டிலிருந்து நானும் கிராம உதவியாளரும் என்னுடைய வாகனத்திலும், போலீசார் வாகனத்தில் எதிரி ராஜா, நீங்கள் (எதிரி பாண்டியராஜன்) மற்றும் போலீசார் ஆகியோர்கள் மற்றும் உதவி ஆய்வாளர் ஆகியோர் தம்தமது இருசக்கரவாகனத்தில் உங்கள் வீட்டிலிருந்து (எதிரி பாண்டியராஜன்) புறப்பட்டார்கள். உங்கள் வீட்டிற்கு (எதிரி பாண்டியராஜன்) Landmark உள்ளதா என்று எனக்கு நினைவில் இல்லை. எந்தெந்த இருசக்கரவாகனத்தில் எதிரி ராஜா மற்றும் நீங்கள் (எதிரி பாண்டியராஜன்)

ஆகியோர் போலீசாருடன் சென்றீர்கள் என்று எனக்கு நினைவில்லை.

13. உங்கள் வீட்டிலிருந்து (எதிரி பாண்டியராஜன்) புறப்பட்டு எதிரி கணேசன் வீட்டிற்கு சென்றோம். எதிரி கணேசன் மாகாளியம்மன் கோவில் அருகே இருந்தார். மாகாளியம்மன் கோவிலின் எந்த பகுதியில் பின்பா, முன்பா, வலது பக்கமா, இடது பக்கமா எங்கே கணேசன் இருந்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. எதிரி ராஜா கணேசனை அடையாளம் காட்டினார். கணேசன் இருந்த இடம் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். அங்கிருந்து கணேசனை போலீசார் விசாரணைக்காக அவருடைய வீட்டிற்கு அழைத்து சென்றனர். அங்கிருந்து உதவி ஆய்வாளர், போலீசார் இரண்டு நபர்கள், எதிரிகள் ராஜா, நீங்கள் (எதிரி பாண்டியராஜன்) மற்றும் எதிரி கணேசன் ஆகியோர் மொத்தம் 3 இருசக்கரவாகனங்களில் கணேசன் வீட்டிற்கு சென்றார்கள். மேற்சொன்ன 3 இருசக்கரவாகனங்கள் இல்லாமல் நான் தனியாக எனது இருசக்கரவாகனத்தில் உதவியாளருடன் சென்றேன். கணேசன் வீடு எந்த திசையில் அமைந்திருந்தது என்று எனக்கு நினைவில்லை. கணேசன் வீட்டிலிருந்து மூக்குத்தி கைப்பற்றப்பட்டது. எதிரி கணேசன் ஒரு வாக்குமூலம் கொடுத்தார். அதனை போலீசார் எழுதினார்கள். குறிப்பிட்டு எந்த போலீசார் எழுதினார் என்று எனக்கு தெரியாது.

14. போலீசார் என்னை விசாரித்தார்கள். எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று நினைவில்லை. நான் அலுவல் ரீதியாக போலீசார் விசாரணைக்கு சென்றுவந்ததை என்னுடைய அலுவலக கோப்பில் குறிப்பிட்ட பராமரிக்க வேண்டும் என்றால் சரியல்ல. கணேசன் வீட்டிலிருந்து காவல்நிலையத்திற்கு சென்றோம். காவல் நிலையத்திலிருந்து நான் வீட்டிற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்று

நினைவில்லை. நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கக்கூடாது என்ற விதிமுறை எனக்கு தெரியும்.

**3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

15. உங்களை (எதிரி கணேசன்) உங்களது வீட்டில் வைத்து போலீசார் கைது செய்தார்கள். உங்களை (எதிரி கணேசன்) உங்களது வீட்டில் வைத்து போலீசார் கைது செய்தபோது உங்கள் வீட்டில் (எதிரி கணேசன்) வேறு யாரும் இல்லை.

**மறு விசாரணை –** இல்லை.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

(ஒப்பம்) எம். வசந்த குமார்,
கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.